தூத்துக்குடி மாநகராட்சி
மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கோப்பு எண் **H3/00874/2021**

தூத்துக்குடி மாநகராட்சியில் **தூய்மை இந்தியா இயக்கம் திட்டத்தின்** கீழ், கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள **மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட (E.Tender & Sealed Two cover system)** முறையில் **ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.** இப்பணிகளை மேற்கொள்வதற்கு முன்வரும் ஒப்பந்ததாரர்கள் 28.04.2022 மாலை 3.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்க https://tntenders.gov.in இணையதளத்தில் ஏற்றம் செய்தல் வேண்டும் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மைய அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பெட்டியில் 29.04.2022 அன்று மாலை 3.00 மணிக்குள் சேர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்படி இணையதளத்தின் மூலம் ஏற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் சேர்க்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 29.04.2022 அன்று மாலை 3.30 மணியளவில் வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில், ஒப்பந்தப்புள்ளி திறப்புக் குழுவால் மாநகராட்சி மைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும். எதிர்பாராத சூழ்நிலையில் அன்றைய தினம் அரசு விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டாலோ அல்லது மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் ஏதாவது தடங்கல் ஏற்பட்டாலோ அதற்கு அடுத்த வேலைநாளில் அதே நேரத்தில் மேற்குறிப்பிட்டுள்ள நேரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். இதர விபரங்களை மாநகராட்சி வேலை நாட்களில் பொறியியல் பிரிவில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

| வ. எ ண் . | வேலை விபரம் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் | முன் வைப்பு தொகை ரூபாய் லட்சம் | ஒப்பந்தப் புள்ளி அட்டவணை | ஒப்பந்தக் காரர் வகுப்பு | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் 30 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 எண்ணம் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்களை 1வருட காலத்திற்கு வெளிக்கொணர்வு மூலம் அமர்த்திக் கொள்ளுதல். | 73.49 | 73490/- | இலவசமாக இணைய தளத்தில் இருந்து இறக்கம் செய்து கொள்ளலாம் | 2 ம் வகுப்பு மற்றும் தகுதி வாய்ந்த நிறுவனங்கள் | 1வருடம் |

மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை https://tntenders.gov.in இணையதளத்தின் மூலமாக 14.04.2022 காலை 10.00 மணி முதல் 28.04.2022 மாலை 3.00 மணி வரை இலவசமாக இறக்கம் செய்து கொள்ளலாம்.

*நிபந்தனைகள்*

1. வைப்புத்தொகையை வங்கி கேட்பு வரைவோலையாக ஆணையாளர் பெயருக்கு எடுத்து இணைக்கவேண்டும். இதர எந்த வகையிலும் ஏற்கப்படமாட்டாது. மேலும் வங்கி கேட்பு வரைவோலையாக இணைக்கப்படும் வைப்புத்தொகை இந்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தேதிக்குப் பின்னர் எடுக்கப்பட்டிருக்கவேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி அட்டவணைக்காக விண்ணப்பிக்கப்படும் போது மாநகராட்சியிலோ அல்லது வேறு அரசு துறையிலோ பதிவு பெற்ற ஒப்பந்தக்காரராக இருந்து இது நாள் வரை புதுப்பித்து இருந்தால் மட்டுமே விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும். மேலும் அதற்கான அத்தாட்சி நகல் காண்பிக்கவேண்டும்.
3. ஒப்பந்தப்புள்ளி அட்டவணையை தனி உறையிலும் **(Cover B)** மற்றொரு உறையினுள் **(Cover A)** (1)வைப்புத்தொகைக்கான வங்கி வரைவோலை (2) தற்போது நடப்பில் உள்ள வருமான வரி, சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தியமைக்கான சான்றிதழ் 3) மாநகராட்சி அல்லது பிற அரசு துறையில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்ததற்கான புதுப்பித்ததற்கான சான்றிதழ்கள் 4) மாநகராட்சிப் பணியில் ஒப்பந்தக்காரரால் ஏற்கனவே மேற்கொண்டுள்ள பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்குரிய சேமநிதியினை தொழிலாளர் சேமநலநிதி அலுவலகத்தில் நிலுவையின்றி செலுத்தியமைக்கான இரசீது நகல் (Employment Provident Fund receipts) 5)

மேற்படி நிறுவனம் தனி நபர் நிறுவனமாகவோ அல்லது பங்கு நிறுவனமாகவோ இருப்பின் அதற்கான ஒப்பந்தப்பத்திர நகல் முதலியன வைக்கப்படல் வேண்டும் இவையிருந்தால் மட்டுமே மற்றொரு ஒப்பந்தப்புள்ளி அட்டவணைக்கான உறை திறக்கப்படும். மேற்கண்ட இரு உறைகளையும் தனித்தனியே மூடி அரக்கு முத்திரையிட்டு பின் மூன்றாவது பெரிய உறையினுள் வைத்து மூடி அரக்கு முத்திரையிட்டு ஒப்படைக்கவேண்டும். மேற்கண்ட மூன்று உறைகளின் மேல்பகுதியில் 1) ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண், 2) பணியின் வரிசை எண், 3) பணியின் பெயர், 4) மதிப்பீட்டுத் தொகை ஆகியவை தெளிவாக குறிப்பிடப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு அரக்கு முத்திரையின்றி பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படமாட்டாது.

4. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் படி செல்லுபடியாகிற (Valid) வணிக வரி தடை நீக்க சான்றிதழ் (Clearance Certificate) ஒன்றின் நகல் வரிசை எண் 3-ல் உள்ள நிபந்தனையின்படி ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும். அவ்வாறு இணைக்கப்படாமல் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி நிராகரிக்கப்படும்.

5. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்தப்புள்ளி மதிப்பில் குறையாமல் கடந்த 3 வருடங்களில் ஏதாவது இரண்டு வருடங்களுக்கு தனித்தனியே (2018-19, 2019-20, மற்றும் 2020-21) வணிகம் செய்தமைக்கான சான்றிதழ் (Financial Turn Over) உரிய துறையில் இருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

6. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையின்படி ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளும் நிறுவனம் தனி உரிமையாளர் நிறுவனமாகவோ அல்லது பங்குதாரர் இணைந்து நடத்தும் நிறுவனமாகவோ இருந்தால் அதற்கான அத்தாட்சி நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும். அவ்வாறில்லாமல் இருந்தாலும் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

7. ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்வதில் ஆணையாளர் அவர்களின் முடிவே இறுதியானதாகும்.

8. ஒப்பந்தப்புள்ளி கோருபவர்கள் அல்லது ஒப்பந்தப்புள்ளி கோரும் நிறுவனம் கடந்த ஐந்து வருடங்களில் ஒப்பந்த நிபந்தனையை மீறியதற்காக தமது ஒப்பந்தத்தை ஒப்பந்த நிறுவனத்தால் இரத்து செய்திருப்பின் அவர்கள் இந்த ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள இயலாது.

குறிப்பு:

1) ஒப்பந்தப்புள்ளி கொடுக்கத் தகுதி வாய்ந்த ஆவணங்கள் ஒப்பந்தப்புள்ளியோடு தவறாமல் இணைக்கப்பெறவேண்டும்.
2) வரையறுக்கப்பட்ட தகுதி இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் உள்ள ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நன்கு படித்து அறிந்து கொள்ள ஒப்பந்ததாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
3) காலதாமதமாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும். அஞ்சல் துறையின் காலதாமதத்திற்கு மாநகராட்சி பொறுப்பாகாது.
4) ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும் நாள் மற்றும் திறக்கப்படும் நாள் எதிர்பாராதவிதமாக விடுமுறை என அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**Visit our web site:** https://tntenders.gov.in

---

(ஒம்) திருமதி.தி.சாருஸ்ரீ இ.ஆ.ப.,
ஆணையாளர்
தூத்துக்குடி மாநகராட்சி

/உ.ந.உ.ப/

ஆணையருக்காக
தூத்துக்குடி மாநகராட்சி

பெறுநர்
1) மாண்புமிகு மேயர் அவர்கள் மேஜைக்கு
2) ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் அவர்கள் மேஜைக்கு,
3) உதவிசெயற்பொறியாளர் / மண்டல உதவி ஆணையர் தூத்துக்குடி மாநகராட்சி,
4) மாநகராட்சி மண்டல விளம்பர பலகை

தூத்துக்குடி மாநகராட்சி
மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கோப்பு எண் **H3/00874/2021**

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர் மற்றும் முகவரி | ஆணையாளர், தூத்துக்குடி மாநகராட்சி |
| 2 | வேலையின் பெயர் :. தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் 30 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 எண்ணம் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்களை 1 வருட காலத்திற்கு வெளிக்கொணர்வு மூலம் அமர்த்திக் கொள்ளுதல். | மதிப்பீட்டுத் தொகை ரூ.73.49 இலட்சம்<br>முன்வைப்புத் தொகை ரூ73490/- |
| 3 | ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த இணையதள முகவரி | **https://tntenders.gov.in** (ஒப்பந்தப்புள்ளி அட்டவணையை மேற்படிஇணையதளத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்) |
| 4 | ஒப்பந்தப்புள்ளிகள் நமூனா இறக்கம் செய்தல் | 14.04.2022 முதல் 28.04.2022 பிற்பகல் 3.00 மணி வரை |
| 5 | ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் | 29.04.2022 பிற்பகல் 3.00 மணி வரை |
| 6 | ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் இடம், நாள், நேரம் | தூத்துக்குடி மாநகராட்சி மாநகராட்சி மைய அலுவலகம் 29.04.2022 பிற்பகல் 3.30 மணி |

(ஒம்) திருமதி.தி.சாருஸ்ரீ இ.ஆ.ப.,
ஆணையாளர்
தூத்துக்குடி மாநகராட்சி

/உ.ந.உ.ப/

ஆணையருக்காக
தூத்துக்குடி மாநகராட்சி

4/4/2022

**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**
**E.Tender and Sealed Two cover system**
**Tender Notice**

**File.No H3/00874/2021**

| | | |
|---|---|---|
| 1 | Tender Inviting Authority Designation, Address | Commissioner, Municipal Corporation, Thoothukudi. |
| 2 | Name of the work : Engaging of 30 Animators, 4 Zonal Supervisors and 1 No. of Co-ordinator to carry out the IEC activities on out sourcing basis for 1 year under Swachh Bharat Mission in Thoothukudi City Municipal Corporation. | Estimate Amount: Rs. 73.49 Lakhs<br><br>EMD : Rs.73490/- |
| 3. | Web site Address | https://tntenders.gov.in<br>( Tender document available from the above web site at free of cost) |
| 4 | Date and Time for the Bid document available | From 14.04.2022 to 28.04.2022 up to 3.00 PM . |
| 5 | Due date and time for submission of bids | 29.04.2022 upto 3.00 pm |
| 6 | Place, Date and time of opening of bids | Thoothukudi Corporation main office 29.04.2022 at 3.30 pm |

(Sd) Mrs.T. Charusree, IAS,
Commissioner
Thoothukudi Corporation

// Ture Copy //

For Commissioner
Thoothukudi Corporation

தூத்துக்குடி மாநகராட்சி

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

1. ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர், பதவி முகவரி : ஆணையாளர் தூத்துக்குடி மாநகராட்சி.

2. அ) பணிகள் மேற்கொள்ளப்படும் விபரம் :

| வ. எண். | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை இலட்சத்தில் | முன்வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 30 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 எண்ணம் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்களை 1 வருட காலத்திற்கு வெளிக்கொணர்வு மூலம் அமர்த்திக் கொள்ளுதல். | ரூ.73.49 இலட்சம் | ரூ.73490/- |

ஆ) பணி நடைபெறும் மாநகராட்சியின் பெயர் : தூத்துக்குடி

3) ஒப்பந்தப்புள்ளி அட்டவணை பெற்றுக் கொள்ளும் விபரம் : 14.04.2022 காலை 10.00 மணி முதல் 28.04.2022 பிற்பகல் 3.00 மணி வரை இணையதளம் மூலம் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். (**https://tntenders.gov.in**)

4)செலுத்தப்பட வேண்டிய முன் வைப்புத் தொகை விபரம் : வரிசை எண் 2(அ)-ல் கண்டுள்ளவாறு மின்னணு ஒப்பந்தப்புள்ளிக்கு வங்கி வரைவோலையினை ஸ்கேன் செய்து இணைய தளத்தில் ஏற்றம் செய்ய வேண்டும். மேலும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி / இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிக்கு வங்கியாளர் வரைவோலை (Banker's Demand Draft) ஆக மட்டுமே ஆணையாளர், தூத்துக்குடி மாநகராட்சி என்ற பெயருக்கு எடுத்து இணைத்தல் வேண்டும்.

5) ஒப்பந்தப்புள்ளிகளை பூர்த்தி செய்து இணைய தளத்தில் ஏற்றம் செய்வதற்கான கடைசி நாளும் நேரமும். : 28.04.2022 பிற்பகல் 3.00 மணி வரை ஸ்கேன் செய்த அசல் வங்கி வரைவோலையினை 29.04.2022 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் தூத்துக்குடி மாநகராட்சி மைய மைய அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

6) இணையதளத்தின் மூலம் ஏற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இறக்கம் செய்யப்படும் விபரம் மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் மற்றும் இடமும் : ஒப்பந்தப்புள்ளி திறப்புக்குழு முன்னிலையில் தூத்துக்குடி மாநகராட்சிமைய அலுவலகத்தில் 29.04.2022 பிற்பகல் 3.30 மணி முதல் இணையதளத்திலிருந்து இறக்கம் செய்யப்படும். மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 7) | ஒப்பந்தப்புள்ளி அலுவலர் பொருத்தமானது எனத் தீர்மானிக்கும் முக்கியமான தகவல் | : | முன் வைப்பு தொகையினை வங்கியாளர் வரைவோலை (Banker's Demand Draft) ஆக மட்டுமே ஆணையாளர், தூத்துக்குடி மாநகராட்சி என்ற பெயருக்கு எடுத்து இணைத்தல் வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்வதில் ஆணையாளரின் முடிவே இறுதியானதாகும். |

(ஒம்) திருமதி.தி.சாருஸ்ரீ இ.ஆ.ப.,
ஆணையாளர்
தூத்துக்குடி மாநகராட்சி

/உ.ந.உ.ப/

ஆணையருக்காக
தூத்துக்குடி மாநகராட்சி